புதினப்பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதி௵ (1889)
ஆவணி௴ உ௮௳
ஆரம்பமானது.

THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.

யாழ்ப்பாணப் பட்டினம்:	௵ 1-க்கு	ரூ. 5-60
வெளியூர், இந்தியா:	,,	ரூ. 9-40
தொலைவாய்ப்பகுதி:	,,	ரூ. 9-40
தனிப்பிரதி:		சதம் 6

முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.

முதன்முறைக்கு:—ஒருகலம்		ரூ. 9-40
,,	அரைக்கலம்	ரூ. 5-00
,,	கால்கலம்	ரூ. 3-15
,,	ஒரு அங்குலம்	சதம் 65

அடுத்த முறைகட்கு ஷை விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினாலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—௩௭. } யாழ்ப்பாணம்:— குரோதன௵ ஐப்பசி௴ ௨௰௳; (1925 நவம்பர் 5) வியாழக்கிழமை { இலக்கம்—௩௫

உ

கணபதி துணை.

சீர்பூத்த கருவிநா லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானார் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது
மதம்பூத்த விநாயகன்ற னடிவணங்கி வாழ்வாம்'

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இனும் காலண்டர் இனும்.

எங்களிடம் கட்டி வெள்ளியிலும் 1-ம் தெ. 2-ம் தெ. வெள்ளியிலும் மிச்சம் அப்புரவாக வேலைமுடித்த முாசுகுத்தி கெங்காதரக்கொடி கைகோர்வை, முகப்புக்கொடி, காஞ்சி அரைஞாண்கொடி, கால்தண்டை, கொலுசு, வங்கைகளும் கடயம் கங்கணம், மயிர்மாட்டி, ஒட்டியாணமும், இமிடேசன் செகப்பு கம்மல் தோடு கடுக்கன் மோதிரங்கள் இன்னும் இதரவெள்ளி தங்க நகைகளும் பட்டுபருத்திமுதலிய ஜவுளித் தினுசுகளும் விலைகள் சகாயம். விலாசம் தெரிவித்தால் பிரைஸ்லீஸ்டு அனுப்புகிறோம். சுபம்.

தோ. வெ. சென்னிசெட்டி &சன்ஸ்
சராப். ஜவுளி வியாபாரம்
குகை, சேலம்,
தென்-இந்தியா.

(H. 41.)

இனும்! காலண்டர் இனும்!!

எங்கள் கம்பெனியில் கட்டி வெள்ளிச் சாமான்களும், தெ. 1-ம், தெ. 2-ம் வெள்ளியாலும் மிச்சம் துப்புரவாக வேலை செய்த முாசுகுத்தி கெங்காதரக் கொடி, கைக்கோர்வை முகப்புக் கொடி, காஞ்சிக் கொடி, கால் தண்டை, செயின்கொலுசு, இன்னும் காலிற் போடும் சாமான்களும், மயிர்மாட்டி, கடயம், ஒட்டியாணம், மோதிரம், புதுச்செப்புக் கம்மல், தோடு, கடுக்கன், சிமை வயிரக்கப்பி சட்டங்கள், ஜவுளி பட்டும் பருத்தியும் கலந்த சேலை, சோமன், இன்னும் வேண்டிய சாமான்களும் இருக்கின்றன. தாங்கள் விலாசம் தெரிவித்தால் கிரயஜாபிதா அனுப்புகிறோம்.

நா. பிளே செட்டி அண கோ.,
சருப் ஜவுளி வியாபாரம்,
குகை, சேலம்,
தென் இந்தியா.

(H. 39)

வீ. ஸாமி. அய்யங்காருடைய

அறைக்கிரைவிதைத் தைலம்.

பித்த மேகரோகங் கிரகதோஷ அதனுற் கண்மறைப்பு, கண்ணெரிச்சல், கண்புகைச்சல், கண்ணினின்று நீர்வடிதல், ஒருதலைவலி, இருதலைவலி, பீனிசம், காதினுல் சீழ்வடிதல், காது இரைச்சல், காதுவலி, ஐந்தவருஷத்திற் குட்பட்டதாயும் இரைச்சலோடு கூடிய காதடைப்பு, கரப்பன், தேமல், சிரசில் மயிர் உதிர்தல், கொண்டுவிழுதல் முதலான ரோகங்களை நிவர்த்திப்பதமன்றி மயிரை நன்றாய் வளரச்செய்யும் இந்த கோட்டையில் காணப்படாத கழுத்திற்குமேற்பட்ட சகல வியாதிகளையும் அனுகூலப் படுத்தும், மேற்கண்ட வியாதியில்லாதவர்கள் தேய்த்து ஸ்நானம்பண்ணினுல் தேகத்திற்குக் குளிர்ச்சியையும் ஆரோக்கியத்தையும் கொடுக்கும். வாரத்திற்கு இரண்டுதடவை காலை 8 மணிக்குள் வெந்நீரில் சீயாக்காய்தேய்த்து ஸ்நானஞ்செய்து யாதொரு பத்தியமுமின்றி உடனே போஜனஞ் செய்து கொள்ளவேண்டும். 8 நாள்வரையிலும் சுகந்தம் மாருது அன்று பகலில்மாத்திரம் தூங்கக்கூடாது. 10 பலங்கொண்ட புட்டி 1-க்கு கிரயம் ரூபா 1—10—0. 'பாக்கிங்போஸ்டேஜ் சார்ஜு பிரத்தியேகம்'

'விற்பனைக்கு கமிஷன் ஏஜண்டுகள் தேவை. விபரம் எழுதிக்கேட்கு.'

ஜண்பகத்தம்மாள்,
8 நம் பிராடஸ் ரோட்
மைலாப்பூர், சென்னை,

(Q. 67.)

சுரத்தை நீக்கும் அற்புதமான மருந்து.

குளிர் (குலைப்பன்) காய்ச்சல் முதலிய சகல விதமான சுரங்களையும் டக்டர் மைக்கோயின் "சுரசங்காரி" ஔஷதம் உடனே மாற்றிவிடும். டக்டர் மைக்கோயின் சுரசங்காரி யென்னும் மருந்து எவ்வகைச்சுரத்தையும் மந்திரவசத்தால் மாற்றுவதுபோல உடனே மாற்றிவிடுகின்றது. மற்றும் வைத்தியர்களினுல் மாற்றமுடியாத நெடுநாட்பட்ட எவ்வகைச்சுரமும் இந்த மருந்தில் நாலு மூன்று போத்தலை உபயோகிப்பதனுல் முற்றாக மாறிவிடுகின்றது. ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். ஒருபோத்தல் சோவ்ட மருந்தின்விலை ருபா 1 சதம் 50. இம் மருந்து கொழும்பு கார்ஜில்ஸ் (Cargills Ltd.) கம்பனியிலும் மற்றும் மருந்துச்சாலைகளிலும் பெறற்பாலது. (Y. 47.)

சாலாமிஸ்திரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலகநன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன். ஆனால் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளும் இதனுலுண்டாகுஞ் சுகத்தை அடையும்படி பொது ஜன நலத்தைக்கருதியே இப்போது இந்த லேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தாகா, பீதாளு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ வங்கபஸ்பம், அப்ரக்பஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம்' சாம்பிராணிப் பதங்கம் இன்னும் அநேக புஷ்டியான மூலிகைவகைகள் சேர்த்துச் செய்யப் பெற்றிருக்கின்றது,

இதனுல் நீர்மிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு, ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம் பித்தநீராமை, பித்தபாண்டு, பீனிசம், கைகால் காந்தல் வலி, இடுப்புவலி, பக்கவாய்வு இன்னும் அநேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லிய வியாதிகள் சுகமடைவதுடன் ருதுவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும் பெறுவார்கள். பால் விருத்தியாகும்.

இந்தலேகியத்தின் விலை ருத்தல் ஒன்றுக்கு ரூபா ௨௦. அரைருத்தலுக்கு ரூபா ௧௦. கால் ருத்தலுக்கு ரூபா ௫ தபாற்செலவு பிரத்தியேகம்.

சிங்கப்பூர் பினங்கு முதலிய தொடுவாயிராச்சியப்பகுதிக்கு வீ. பீ. சட்டம் இல்லாததினுல் முன் மணி ஆடர் அனுப்புதல் வேண்டும்.

இங்ஙனம்,
க. ஆறுமுகம்பிள்ளை,
சிவஞான ஆரோக்கிய சுகாதாரவைத்தியசாலை,
காத்தான்குடி போஸ்டு,
மட்டுக்களப்பு,
சிலோன்.

(M. 36.)

ESTABLISHED, 1909.

MESSRS. A. S. M. A. KHADER BROTHERS

Kairul Muslimeen Medical Hall
PORTONOVO (*South Arcot Dt; India.*)

இந்த விளம்பரம்முழுதும் தாங்களும் வாசித்து தங்கள் சிநேகிதர்களுக்கும் வாசிக்கக்காண்பியுங்கள். குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வது போல் வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

நண்பிற்குகந்த அன்பர்காள்! நமது கம்பெனி ஸ்தாபித்த 1909-வது வருடமுதல் நாளது தேதிவரையில் கீழ் காணப்பட்ட லேகியத்தைச் செய்து இந்தியா, பர்மா, சிலோன், மலாய் முதலிய தேசவாசர்களுக் கனுப்பி ஒவ்வொரு மஹான்களாலும் பிரபுக்களாலும் பிரயோகித்து நோயற்ற வாழ்வென்னும் பாக்கியத்தை குறைவற்ற செல்வமாயடைந்து ஒவ்வொரு கனவான்களாலும் நமக்கு யோக்கிய நற்சாக்ஷிகளும் அனந்த பரிசுகளும் பெற்றுவருவது நேயர்கள் அறிந்த விஷயமேயாம். தற்கால கிலைமைக்கேற்றுப்போல் அனந்த பொய்வசனங்களை விடுத்து புதிது புதிதாக இத்தகைப்போன்ற குருவிலேகிய மெண ஓர் நாமஞ் சூட்டி பத்திரிகை நோட்டீஸ் மூலமாய் வெளியிட்டிருக்கும் போலி மருந்துகளை நம்பிக் கையாண்டு பொருள் நஷ்டமும், மனக்கஷ்டமுங் கொள்ளாது நீடியகாலத்து அனுபவ முத்திபெற்ற உண்மையான மருந்துகளை பூர்வமுடைய யோகவான்கள் உண்டு தருவித்து அருந்துவீர்களாக.

இதுவே அசல் பாகமுள்ளது! ஒருவருமிகழ்ந்து பேசாதது!!

உத்திரவாதமுள்ள

சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்

☞ இச்சிறந்த இராஜ ஔஷத லேகியமானது முற்காலத்து மன்னர்களால் உபயோகித்துப் பிரசன்னமாய்ப் புகழ்ப் பெற்று வீரியசக்திக் குறையாது இல்லறத்தின் இன்ப வாழ்க்கையையடைந்து புத்திர பௌத்திர சம்பன்னராய் நீடூழிவாழும் பொருட்டே நமது முனிவோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், சோர்வில்லாத தைரியத்தை உண்டாக்கக் கூடியதுமான ஒப்பற்ற ஓர் புருஷ சஞ்சீவியாகின்றது. இச்சிறந்த அபூர்வ குண லேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியசென ஜனனுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கிறேம். மற்ற விவரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

ஷை லேகியத்தின் முக்கிய குணமாவது.

[illegible]வாதபித்த சிலேத்ம மிகுதிக் குறைவால் ஏற்படும் இரத்தக் குறைவு எழுவகை தாதுக்களின் [illegible] அஸ்தி, வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீர்சுருக்கு, நீரெரிச்சல், நீர் [illegible]சுருதல ஆகிய நோய்களையும் நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாது நஷ்டம், சித் [illegible]கம், Spermatorrhea, தேகமெலிவு, சதா இடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசி மந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஓடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி Nervous-diseases ஆகிய நோய்களைச் சுகப்படுத்தி இரத்தத்தைச் சுத்தி செய்து புதிய மேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிட சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது.

40 நாள் சாப்பிடும் பெரிய டப்பி 1-க்கு விலை ரூ. 8—0—0
20 நாள் சாப்பிடும் சிறிய டப்பி 1-க்கு விலை ரூ. 4—0—0

வி. பி. தபால் சார்ஜு பிரத்தியேகம் முற்பணமனுப்பினுல் வி-பி. செலவு இனுமாயனுப்பப்படும். பினங்கு, சிங்கப்பூர், மலாக்கா, கோலாலம்பூர், கிள்ளான் முதலிய Straits Settlements வாசர்களும் Federated Malay States வாசர்களும், மருந்தின் கிரயமும் தபால் செலவு ரூ. 2-ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷை யூர்களுக்கு திண்ணமாய் வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷை குருவியின் சத்தால் செய்யப்படவில்லை யென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லை யென்றுவது அல்லது சில போலியர்கள் ஆயிரக்கணக்கான ரூபாய்களை சபதங்கள் கூறிக்கொண்டு பத்திரிகை வாயிலாய் வெளிவந்த இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குண முண்டென்றுவது அல்லது இந்த அபூர்வ குண லேகியத்தைச் செய்து காட்டினுலாவது, கடவுளுக்குப் பொதுவாய் சத்தியமாய் ரூபிப்பவர்களுக்கு அவர்களால் கூறிய சபதங்களின் தொகையும், நமது கம்பெனியால் ரூ. 1000 இனுமாயும் சேர்த்துக் கொடுக்கப்படும். அப்படியே ரூபித்தும் இனுமுடைய பணத்தைக்கொடுக்கத்தவறினுல் கோர்ட்டு மூலமாகவசூல் செய்துக்கொள்ளலாம். ஆர்டர்செய்யும் நேயர்கள் இப்பத்திரிகையின்பெயரைக் குறிப்பிட்டெழுதவும்.

என் மேல்விலாசம்:—

Tel. Address:—
Kader Brothers
PORTO-NOVO

மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிறதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை,
தென்னுற்காடு ஜில்லா.

(Y. 38.)

ஒற்றுமை.

சித்திரப் படங்களுடனும் விநோதப் படங்களுடனும் தமிழ்மொழி வளர்ச்சி கருதி வரும் மாதப்பத்திரிகை 'ஒற்றுமை'க்கு 6-வது வருடம் நவம்பர்மாதம் பிறக்கப்போகிறது. மாதிரிப் பிரதி இனும். வருடசந்தா உள்நாடு ரூபா 1. வெளிநாடு ரூபா 1¼. ஏஜண்டுகள் தேவை. நல்ல கமிஷன். 'ஒற்றுமை' ஆபீஸ், சைதாப்பேட்டை, மதராஸ்.

(H. 43.)

சமையல் சௌக்கியம்.

இந்தியாவிலும் வெளிநாட்டிலும் புகழ்பெற்று விளங்கும்.

ருக்குமணி குக்கர்.

சமையல் அதிக்ஷ உபயோகிப்பவர்களுக்கே உண்டு முதல் 8 பேர்களுக்கு ஒரு மணிநேரத்தில் சொற்ப செலவில், தொந்தரவேயில்லாமல் சாதம் 5 கறிவகைகள் சமைக்கும். தனித்தவர்களுக்கும் குடும்பிகளுக்கும் வீட்டிலும் பிரயாணத்திலும் உபயோகம்.

1, 2, 4, 6, 8, பேருக்குரியது ரூபா 13, 18, 22, 27, 33-க் கிடைக்கும். தபாற்கூலி வேறு. விபரப் புத்தகம் இனும். ஏசண்டுகள் தேவை. உடனே எழுதுக.

ருக்குமணி குக்கர் கம்பெனி,
இராயபுரம் (2) சென்னபட்டினம்.

(Y. 45)

அஷ்டபந்தனமருந்து.

இந்தியாவிலிருந்து வருவிக்கப்பட்ட சுத்தமான சரக்குகளைக் கொண்டு செம்மையாகச் செய்யப்பட்ட (சுவாமிக்குச் சாத்தும்) அஷ்டபந்தனமருந்து எம்மிடத்தில் விலைக்கிருக்கிறது.

ருத்தல் ஒன்றின் விலை ரூபா 5.

சு. வைத்தியநாதக்குருக்கள்,
சிவன்கோவில்,
வண்ணார்பண்ணை.

(M. 37)

சேலம் ஜவுளிதினிசுகள்.

எங்களிடம் சொந்தத் தறிகளில் செய்யப்பட்ட பட்டுத்தினிசுகளும், பட்டும் பருத்தியும் கலந்த தினிசுகளும், தாளம்பூக்கரைப் புடைவைகளும், வெள்ளை ஜவுளி தினிசுகள், குண்டஞ்சு, சன்னஞ்சு, பவுன்பேட்டு, இன்னும் பல மாதிரிகள் இருக்கிறது. விலாசம்தெரிவித்தால் பிறைஸ் லீஸ்ட் இலவசமாய் அனுப்புகிறோம்.

விலாசம்:

கோ. ப. சி. அ. வேணுகோபால்செட்டியார்
அன்ட் பிறதர்ஸ்,
ஜவுளி & கமிஷன் ஏஜண்டு,
குகை, சேலம். S. I.

தந்தி விலாசம்:
வேணுகோபால்,
சேலம்.

(H. 32.)

இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— குரோதன ௵
ஐப்பசி௴ ௨௰௨ வியாழக்கிழமை.

“ஆற்றைக் கடந்த எமக்குக் கால்வாய் தாண்டுவது அரிதல்ல”.

சென்ற 1917-ம் ஆண்டு தொடக்கம் இற்றைவரையில், ஊரவர்களாகிய எங்கள் சம்மதம்பெற்றும் அரசினர் இஷ்டப்படியும் யாழ்ப்பாணப் பிரிவிலுள்ள அந்நிய நாட்டுக் குடிவகைக் கடைகள் எல்லாம் அகற்றப்பட்டன. (இக்கடைகளிலே போத்தலாக விற்கப்பட்டனவன்றித் திறந்து கடையிற்றனே குடித்தல் முடியாது.) 25 சாராயத்தவறணைகளுள் 19 தவறணைகள் அகற்றப்பட்டன. இங்குள்ள 112 கள்ளுக்கடைகளுள் 92 கடைகள் தவிர்க்கப்பட்டன. இன்னும் ஒழிக்கப்படவேண்டியிருப்பவைகள் 6 சாராயத்தவறணைகளும் 20 கள்ளுக்கடைகளும். யாழ்ப்பாணப்பட்டினத்திலே திறந்து விற்கப்படும் அந்நியநாட்டுக் குடிவகைத் தவறணையொன்றும், ஒரு அந்நிய நாட்டுக்குடிவகை, விடுதிச்சாலையுமாம்.

சென்ற வருடத்தில் இத்தவறணைகளிற் சிலவற்றை நீக்க முயன்றும் அநுகூலமடைந்திலேம். அங்ஙனம் அநுகூலமடையாமைக்குக்காரணம் வேறொன்றுமல்ல; நிச்சயமாக அநுகூலமடைவோமென்ற நம்பிக்கையினால், ஓடுதற்கு ஆமையோடு பந்தயஞ்செய்த முயல் தன்னிடத்துள்ள அதிக நம்பிக்கையினால் நித்திரை கொண்டவாறு, நாங்களும் சிறிது அலட்சியமாக விருந்து விட்டேம். இந்த நற்கருமத்திற்கு மாறாக அந்தரங்கத்திற் பகைவர்சிலர் வேலைசெய்கின்றார்களென்பதைப் பிந்தியே அறிந்தேம். செலவிற்குப் பொருளும் போதாமற் போய்விட்டது. பகைவர் முயற்சி கூடியும் எங்கள் முயற்சி குறைந்தும் போய்விட்டன. இவைகள்தான் நாங்கள் சென்ற வருடம் இந்நற்கருமத்திலே தோல்வியுற்றமைக்குப் பிரதானமான ஏதுக்களென்பதை இப்பொழுது நன்கு அறிந்திருக்கின்றேம். நோய் இன்னதென்பதை யறிந்தபின் அதற்கு வைத்தியஞ் செய்து அதனை நீக்குவது தகைமையும் அநுபவமும் வாய்ந்த வைத்தியர்கட்கு அரிதான கருமமல்ல. பாம்பு குட்டியானாலும் பெரியதடிகொண்டே அதனையடித்தல் வேண்டும்.

ஆதலால் ஊரவர்களாகிய நாங்களெல்லோரும் புத்தபிமானத்தோடும் மிக்க ஊக்கத்தோடும், பொருள் சிரமம் என்னும் இவற்றைச் சிந்தியாது மனம் வாக்குக் காயமொத்து இம்முறை முயற்சிசெய்து, குறங்கொள்ளிபோற் கிடக்கும் எஞ்சிய கள் சாராயத்தவறணைகளை அறவே அகற்றிவிடுதற்காக வேண்டிய முயற்சிகளைச் செய்தல் வேண்டும். சென்றவருடத்திலே தோல்வியுற்று விட்டேமென்று சிறிதும் தைரியவீனப்படவொண்ணாது. “முயற்சிதிருவினையாக்கும்” ‘முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்’ என்ற பிரகாரம், கடவுளருளினாலும் அரசினர் சகாயத்தினாலும் ஊரவர்களாகிய எங்கள் அபிமானத்தினாலும் கூடிய தொகையினவாகிய மதுக்கடைகளை நீக்கிவிட்டேம். நீக்கப்பட்டகடைகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது நீக்கப்படவேண்டியவை சிலவே. ஆற்றைக் கடந்த எங்களுக்குக் கால்வாய் தாண்டுதல் அரிதல்லவே.

இவ்வருடத்திலே நீக்கத்தக்கனவாக விருப்பன: சாராயத்தவறணை ஆறும், 20 கள்ளுக்கடைகளுள் 14கடைகளும், திறந்து விற்கப்படும் அந்நியநாட்டுக்கடையுமாம். இந்தக்கருமத்தை இப்பொழுது தொடங்கிமுயற்சிசெய்து இன்னும் 3 மாசங்களுள் நீக்கிவிடுதல் வேண்டும்.

இந்த வருடம் நீக்கத்தக்கதாக விருக்கும் 21 தவறணைகளையும் ஒழித்து விடுதற்குத் தவறணையொன்றுக்குச் சராசரி 200 ரூபா வீகிதம் 4200ரூபா செலவிற்குவேண்டுமென்றும் உள்ளூரிலும் சிங்கப்பூர் முதலிய பிறவூர்களிலும் வசிக்கும் அபிமானிகள் எல்லாரும் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்யின் “பலதுள்ளி பெருவெள்ளம்” என்ற பிரகாரம் மேலே சொல்லப்பட்ட தொகைப் பணஞ் சேர்ந்து விடுமென்றும் அந்தப்பணத்தைக் கொண்டு தவறணைகளை அறவே நீக்கிவிடலாகுமென்றும் யாழ்ப்பாண மத்தியமதுவிலக்குச் சங்கத்தார் விண்ணப்பஞ்செய்கின்றனர். இந்தப் புண்ணிய கருமம் நிறைவேறும் வண்ணம் ஆண் பெண் வறியவர் செல்வர் என்ற பேதமின்றி எல்லாரும் தங்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்தல்வேண்டும். தாங்கள் அனுப்பவிருக்கும் பணத்தை யாழ்ப்பாணம் மத்தியமதுவிலக்குச் சங்கக் காரியதரிசியாகிய (The Secretary, Jaffna Central, Temperance League) ஸ்ரீ V. முத்துக்குமாரு (M. A.) அவர்களுக்கேனும், ஷை சங்கத்தனாதிகாரியாகிய மிஸ்ரர் J. K. சண்முகம் (B. A.) அவர்களுக்காயினும் காலதாமசமின்றி அனுப்பிவைத்தல்வேண்டும். சங்கத்தார் வழக்கம்போல் வரவுசெலவுக் கணக்குகளைப் பத்திரிகை வாயிலாகப் பின்னர் வெளியிடுவார்கள்.

சிவநாம மகிமை.

[துறைமங்கலம்
சிவப்பிரகாசசுவாமிகள்
அருளிச்செய்தது.]

கலிவிருத்தம்.

காக்கி னானு நயனங்க ளானுமிவ்
வாக்கை யானு மருஞ்செவி யானுநம்
மூக்கி னானு முயங்கிய தீவினை
தீர்க்க லாகுஞ் சிவசிவ வென்மினே

இதன் பொருள்: காக்கினானும் - நாவினாலும், நயனங்களானும் - கண்களினாலும், இவ்வாக்கையானும் - இந்த உடம்பினாலும், அருஞ்செவியானும் - அரிய காதுகளினாலும், நம் மூக்கினானும் - எங்களுடைய மூக்கினாலும், முயங்கிய தீவினை - செய்யப்பட்டுள்ள பாவங்களை, தீர்க்கல் ஆகும் - ஒழித்துவிடல் முடியும்; சிவசிவ என்மின் - (ஆதலினாலே) “சிவசிவ” என்று சொல்லுங்கள் எ-று

நாவினால் இயற்றப்படும் பொய் குறளை வன்சொல் பயனில்சொல் முதலிய பாவங்களும், கண்களினாற் செய்யப்படும் பார்க்கத்தகாதனவற்றைப் பார்த்தல் முதலாம் பாவங்களும், காயத்தினாற் செய்யப்படும் பல பாவங்களும், செவியினாற் செய்யப்படும் கேட்கத்தகாதனவற்றைக் கேட்டல் ஆதியாம் பாவங்களும் மூக்கினாற் செய்யப்படும் முகரத்தகாதனவற்றை முகர்தலாகிய பாவங்களும் “சிவசிவ” என்று உச்சரித்தலினால் அகன்றுவிடுமென்பதாம்.

மெய் வாய் கண் மூக்குச் செவி யென்னும் ஐம்பொறிகளினாலும் ஆக்கப்பட்ட பாவங்கள் சிவநாமத்தைச் சொல்லுதலால் ஒழிந்துவிடுமென்பது தாற்பரியம்.

“நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே” என்ற பிரகாரம் சிவநாமத்தைச் சொல்லுவதனால் நாவின் பாவமும், சிவநாமஞ் சொல்வோரைத்தரிசித்தலினால் கண்களின் பாவமும், “சிவசிவ” என்று சொல்லி விபூதியைத் தரித்தலினாற் காயத்தின் பாவமும், சிவநாமத்தைச் சிரவணஞ் செய்தலாற் செவியின் பாவமும், சிவமணத்தை முகருதலினால் மூக்கின் பாவமும் அகன்றுவிடுமென்க. (ந)

உலகம் பலவிதம்.

“ஐயா, நீங்கள் இந்த நேரத்தி[illegible] தேடி இங்கே வந்தது என்ன[illegible]ஞல் ஆகவேண்டியது ஏது முண்[illegible]” என்று நமது முருகேசு இரவு ஒன்பது மணிவரையில் தமது வீட்டிற்குத் தன்னந்தனியே முக்காடிட்டுப் போர்த்துக் கொண்டு கையிலொரு நீண்ட பொல்லும் பிடித்துக்கொண்டு வந்த சரவணமுத்து அவர்களை மிக்க விநயத்தோடு வினவினர். “முருகேசண்ணை, விசேஷமொன்றுமில்லை; இந்தமுறை “ஏர்பன் கவுன்சிலில்” நானும் ஏதுமொருவட்டாரத்திற்குவரலாமென்று பார்க்கிறேன” என்று சரவணமுத்து சொன்னர். முருகேசு புன்சிரிப்போடு “ஐயா, வேறு எதற்கென்றாலும் நானும் உங்களுக்குத் துணையாக வருகிறேன், முயற்சிசெய்யுங்கள்; வேண்டுமானற் சட்டநிரூபண சபை அங்கத்தவராய் வருதற்குத்தானும் முயற்சிசெய்யுங்கள், நானும் என்னாலியன்ற உதவி செய்கிறேன்” என்றார். “அண்ணை, ஏன் அப்படிச்சொல்லுகிறாய்” என்று சரவணமுத்து அவர்கள் கேட்க “ஐயா, ஏர்பன் கவுன்சிலைப்பற்றிச் சனங்கள் பலருக்கு நல்ல எண்ணமில்லை; ஏர்பன் கவுன்சில வரிகளைக் கூட்டி ஊரவர்களிடத்தில் அறவிட்ட தல்லாமல் வேறு ஏதும் நன்மை செய்யவில்லையென்று சிலர் சொல்லுகிறார்கள்; இதனைப்பார்க்கிலும் முன்னிருந்த “லோக்கல்போட்” எவ்வளவோ விசேஷமென்றுஇன்னுஞ்சிலர் பேசிக்கொள்ளுகிறார்கள். இந்த இரண்டினைக் காட்டிலும் “சனிற்றறி போர்ட்” இன்னுந் திறம் என்று மற்றுஞ் சிலர் கூறுகின்றார்கள். ஏர்பன் கவுன்சில் அங்கத்தவர்கள் தாம் ஒரு கருமத்தைப் புதிதாகச் செய்யப் புகும்போது வரிகொடுக்கும் பட்டினவாசிகளை உசாவாது தங்கள் மனம் போனவாறே செய்துவிடுகின்றார்களென ஒழிந்த சிலர் அவர்களைக் குறைகூறுகின்றார்கள். பட்டினபரிபாலனசங்கப் பிரதிநிதியாகவருதற்குமுற்பட்டுநின்று முயற்சிசெய்தகாலத்திலே ‘என்னைத்தெரிவுசெய்தனுப்பினால் தலைவரிப்பணத்தை அடித்துவிடுவேன், அப்படி நன்மை செய்வேன் இப்படி நன்மை செய்வேன், அது செய்வேன் இது செய்வேன் என்று தனித்தனி ஆசைவார்த்தை சொன்னவர்கள், கவுன்சிலுக்குப்போனபின்பு சனங்களைக் கண்டாலும் பேசுகிறார்களில்லையென்று சிலர் முறையிடுகிறார்கள். பட்டினபரிபாலனசங்கம் வேண்டாம், பழையபடி “சனிற்றறி போர்ட்”மாத்திரமிருந்தாற்போதுமென்று அரசினருக்கு விண்ணப்பஞ்செய்வதற்காகப் பெருமாளகோவிலிலே வியாழக்கிழமைக்கு (இன்றைக்கு) ஒருமகாசபை கூட்டப்படுமென்றும் அதற்கு வரிகொடுப்போரெல்லாரும் வரல்வேண்டுமென்றும் முதலியார் தில்லைநாதர் முதலாக முத்துக்கிருஷ்ணப் பத்தர் ஈறாகப் பதினறுபேர் ஒரு விளம்பரம் விடுத்திருக்கின்றார்கள். இப்படியெல்லாமிருக்கிறபொழுது, ஐயா, நீங்கள் இதிலே தலையிட்டுச் சாயந்தை ஏன் கழற்றுவான் என்பதையிட்டுத்தான் நான் உங்களை இதிற் பிரவேசிக்கவேண்டாமென்று சொல்லுகின்றேன்” என்று முருகேசு கூறிமுடித்தார்.

* * *

“அண்ணை, நீ சொல்வதை நான் ஒத்துக்கொள்ளுகின்றேன், ஆனால் இந்த விஷயத்தில் உன்னுடைய அபிப்பிராயம் என்ன? பட்டினபரிபாலனசங்கம் வேணுமா? வேண்டாமா? திறமையுள்ள பிரதிநிதிகளைப் பட்டினவாசிகள் தெரிவுசெய்து அனுப்பினல் யாதும் நன்மையுண்டாகாதா? இந்தச் சங்கத்தினால் நன்மையுண்டாகவேண்டுமேல் என்னென்ன செய்தல் வேண்டும்; அண்ணை, சொல்லு” என்று சரவணமுத்து அவர்கள் கேட்டனர். “ஐயா, இந்தச் சங்க விஷயமாக என்னுடைய எண்ணத்தை நான் பலமுறையும் கூறியிருக்கிறேன். அதனை இச்சங்கத்தார் கைக்கொள்ளாது அலட்சியஞ் செய்து என்னையும் விபரீதமாக விளங்கி வெறுக்கின்றார்கள்; அதனால் நான் ‘வித்தாரமும் கடம்பும் வேண்டாம் மடநெஞ்சே, செத்தாரைப் போலே திரி’ என்றபடி இதனையிட்டு யாதும் பேசப் பிரியமில்லாமலிருக்கின்றேன்” என்று முருகேசு சொல்லினர். அதற்கு, சரவணமுத்து அவர்கள் “அப்படியல்ல, அண்ணை சங்கத்தார் உன் வார்த்தையை அலட்சியஞ் செய்வது சரியல்ல; இது அவர்கள்மேற் குற்றம். அதற்காக உன் எண்ணத்தை எனக்குச் சொல்ல நீ மறுக்கவொண்ணாது” என்று கேட்டார்.

* * *

“ஐயா, பட்டினபரிபாலன சங்கம் ஒரு கூடாத ஸ்தாபனமல்ல; முகம் பழுதாகவிருந்தற்குக் கண்ணாடியைத் தோஷஞ் சொல்லவொண்ணாது. ஊரவர்கள் தங்கள் பட்டினத்தின் பரிபாலனத்தைத் தாமாகவே செய்யப் பழகட்டும் என்ற நோக்கமாகவே பட்டினபரிபாலனசங்கம் நகரசங்கம் சுகாதாரசங்கம் என்று சொல்லப்படும் இவைகள் ஸ்தாபிக்கப்படுவனவென அரசினர் கூறுகின்றனர். கூடியவரையில் பட்டினபரிபாலனப் பொறுப்பை, ஊரவர்களினாலே தெரிவு செய்து அனுப்பப்பட்ட பிரதிநிதிகளிடத்திலேயே அரசினரும் ஒப்பித்திருக்கின்றார்கள். இப்படியிருத்தலினால் அரசினரை நாம் குறை சொல்வது சரியல்ல. இப்பட்டின பரிபாலன சங்கத்தின் குறைவும் நிறைவும் நாங்கள் அனுப்பும் சங்கப் பிரதிநிதிகளிலேயே தங்கியிருக்கின்றன. இப்பிரதிநிதிகள் தங்கள் பொறுப்பென்ன, கடமைகளென்ன, தாங்கள் யாருடைய பிரதிநிதிகள் என்ற இவைகளை மறந்துவிடவொண்ணாது; இவர்கள் ஒரு கருமத்தைப் புதிதாகச் செய்யப் புகும்போது அந்தந்த வட்டாரத்துப் பிரதிநிதிகள் தத்தம் வட்டாரத்தில் வசிக்குஞ் சனங்கட்குத் தாங்கள்செய்யப்புகும் கருமத்தைத் தெரிவித்துச் சனங்களுடைய நோக்கத்தையும் நன்கு அறிந்து, அவற்றைச்செய்தல்வேண்டும். தாஞ் செய்யப்புகும் கருமத்தினால் வரும் நன்மையை விளங்காத சனங்களுக்கு விளங்கப்படுத்தல்வேண்டும். அதனையொழித்து, இக்காலத்தில் சில பெற்றார் தங்கள் கன்னிகைக்கு அக்கன்னிகையின் சம்மதத்தைச் சிறிதும் உசாவாது ஒரு வரனை மணம் முடித்துவைப்பதுபோல, இப்பிரதிநிதிகள் பட்டினவாசிகளைச் சிறிதும் ஆராயாது, அவர்கள் சம்மதத்தை அறியாது தம்மனம் போனவாறே கருமங்களைச் செய்வதனாற் பெரும் மனஸ்தாபம் விளைகின்றது; பட்டினபரிபாலனசங்கத்தில் வெறுப்புண்டாகின்றது. மேலும் ஒவ்வொரு வட்டாரப் பிரதிநிதிகளும் மாசமொருமுறையேனும் தத்தம் வட்டாரத்தில் வசிப்பவர்களை, குறிக்கப்பட்ட ஒரு இடத்திலே கூடச்செய்து, பட்டினபரிபாலன சங்கவாயிலாகச் செய்யப்படவேண்டிய கருமங்கள் எவையென்பதை அவர்கள் வாயிலாக அறிந்தும், தாம் இன்னின்ன கருமத்தைச் செய்தல் நன்மையாகாதோ என்று கேட்டும் ஆராய்ந்திதல்வேண்டுமெனப் பலமுறை நான்கூறினேன். ஏழை வார்த்தை சபைக்கேறுமா? இன்னும் பிரதிநிதிகள், பட்டினத்தின் செல்வம் வறுமை யென்னும் இவற்றை நன்றாய் அறிந்திருத்தல்வேண்டும் கொழும்பு நகரசங்கத்திலே ஒரு கருமம் செய்யப்பட்டபடியால் அதனை யாழ்ப்பாணப் பட்டினபரிபாலன சங்கத்தாரும் செய்யவேண்டுமென்ற நியதியிருக்கவொண்ணாது. கொழும்பு மலைவளம் சீர்வளம் செல்வம் என்னும் இவற்றோடுகூடியநகரம். யாழ்ப்பாணமோ சீர்வளம் நிலவளமின்றித் தரித்திரத்தோடு கூடிய பட்டினம். ஆதலினாலே, கொழும்பிற்கு அநுகூலமாகவுள்ள பல இங்கு பிரதிகூலமாயிருத்தலும் கூடும். இவற்றையெல்லாம் பட்டினப் பிரதிநிதிகள் சிந்தித்தல்வேண்டு” மென்று கூறி முருகேசு பின்னுஞ் சொல்லுகின்றார்.

* * *

“இங்குள்ள ஏழைச் சனங்கள் வருடத்திற்கொருமுறை தலைவரிப் பணங் கொடுக்க, படும்பாட்டை நான் அறிவேன். அப்படிப்பட்ட ஏழைகள் தலையில் விட்டுவரி சோலைவரி பொலிஸ்வரியென்று சுமத்திவிட்டால் இச்செயல் கரிக்குரிகி தலையிற் பனங்காயைச் சுமத்திவிடுதல் போலிருக்கும். மின்சாரவெளிச்சம், நல்லதண்ணீர் தேவையெனக் கண்டாலும், பட்டினவாசிகளுடைய வறுமையை நோக்கி இப்பொழுது அவற்றை விடுதல் வேண்டும். பூக்கொய்வோர் மலர்ந்த பூவைக் கொய்வரன்றிப் பூச்செடியை வேரோடு பிடுங்கமாட்டார்களல்லவா; மலரையும் கசக்கி மணக்கவொண்ணாது. சுருங்கச் சொல்லுகில் இப்பட்டினபரிபான சங்கத்தார் எக்கருமத்தையும் பட்டின வாசிகளோடு கலந்து யோசித்துச் செய்வரேல் சங்கத்தாருக்கும் சனங்களுக்குமிடையே இப்பொழுதுஏற்பட்டுள்ள வெறுப்பு ஒருபோதும் ஏற்பட்டிராது; இற்றைக்கு மூன்று வருடத்திற்கு முந்திப் பட்டினவாசிகளிடஞ் சென்றபிரதிநிதிகள் இப்பொழுது சிலநாட்களாகத்தான் பின்னரும் அவர்களைத் தேடிப் புறப்பட்டிருக்கின்றார்கள். இப்பொழுது இருக்கும் அங்கத்தவர்கள் தக்கவர்களோவென்ற விஷயமாகச் சொல்லுகில், இவர்களைக் காட்டினுஞ் சிறந்தவர்கள் வேறெவரும் இங்கேயில்லையென்று சொல்லலாம். ஆனால் இவர்கள் இதுகாறும் அநுசரித்து வந்த முறையை முற்றாகக் கைவிட்டுத் தாங்கள் சனங்களின் பிரதிநிதிகளென்ற எண்ணமுடையவர்களாய் நடந்துகொள்ளுதல் வேண்டும். பட்டினத்தின் நிலைமைக்குத்தக்கபடி பட்டினசங்கமிருக்க வேண்டுமேயொழிய, பட்டினசங்கத்திற்குத்தக்கபடிபட்டினம் இருத்தல்முடியாது, இவ்விஷயமாக இன்னொருமுறை சில சொல்லுவேன்” என்று முருகேசு கூறுதலும் சரவணமுத்து அவர்கள் பின்னர்ச் சந்திப்பதாகச் சொல்லி முருகேசுவிடம் விடைபெற்றுச்சென்றார்.

கால நிலை.

சென்ற இரண்டு மூன்று நாட்களாக மழைவெளித்திருக்கிறது. வெய்யில் எறிக்கின்றது. பனியும் காணப்படுகின்றது.

மாலைதீவுத் திறை

மாலைதீவுச்சுல்த்தான் வருடந்தோறும் இலங்கை அரசினருக்குச் செலுத்தும் அரசிறை இந்த நவம்பர்௴ 15௳ வரையில் எமது பிரதிதேசாதிபதியவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

பிரான்சிய தகரப்பெட்டி விபத்து.

சென்ற வியாழக்கிழமை புத்தளம் கச்சேரி உப்பரிகையிலே காசிம் என்னும் சேவகன் ஒருவன் தளபாடங்களை மினுக்கும் மருந்துத் தகரமொன்றைத் திறக்க முயன்றபோது அது காத்திராமண்ணம் வெடித்தமையினால் சேவகனுடைய தேகம் முழுவதிலும் நெருப்புப் பற்றியது. அங்குள்ள ஏசன்றரும் ஏனைய உத்தியோகஸ்தரும் அங்குச் சென்று பிறபொருள்களிலும் கட்டிடத்திலும் நெருப்புப் பரவாவண்ணம் காப்பாற்றினர். அதிக காயமுற்ற காசிம் என்னும் சேவகன் புத்தளம் வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டனன்.

மரண தண்டனை இருபது வருடக் கடுஞ்சிறையாகக் குறைக்கப்பட்டமை

1924-ம் வருடம் செப்டெம்பர்௴ முறட்டிலே வள்ளியாச்சி என்னும் ஒரு பெண்ணை அங்குள்ள ஐயன்பிள்ளை யென்னும் ஒருவன் கொலைசெய்த வழக்கு, சுப்பிறீங் கோட்டிலே விசாரணை செய்யப்பட்டு எதிரிக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. எதிரியும் அவன் தந்தையும், றெவறென் ஜேக்கப் மெண்டிஸ் அவர்களைத் தலைமையாகக்கொண்ட முறட்டுவாசிகளும் தேசாதிபதியவர்களுக்கு மனுப் பண்ணியகாரணமாக ஷை மரணதண்டனை இருபது வருடக் கடுஞ்சிறையாக மாற்றப்பட்டது.

கொழும்புத் தபாற்கந்தோரிற்களவு
விலையுயர்ந்த இரத்தினங்கள் மறைந்தன.

சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள தலைமைத் தபாற்கந்தோரில் விலையுயர்ந்த இரத்தினங்கள் பொதியப்பெற்ற ஒன்பது "பார்ஜல்" களையுடைய தபாற்சாக்கு ஒன்று, அங்குள்ள உத்தியோகத்தரும் சேவகரும் கடமைபார்த்துக்கொண்டிருந்தபோது மாயமாய் மறைந்துவிட்டது. இச்செய்தியை அறிந்த பொலிசர் சிறிதும் காலம் தாழ்க்காது வந்து தம்மாலானமட்டும் முயன்றும் சிறிதும் சித்திபெய்திலர். அங்குள்ள "பார்சல்" களின் பொறுப்பை ஏற்று நடத்தும் லிகிதர் ஒருவரின் சிரத்தையின்மையே இதற்குக் காரணமாம்.

வட உவேல்சில் பயங்கரமான விபத்து.

சென்ற திங்கட்கிழமை வட உவேல்ஸ் என்னும் இடத்திலுள்ள அணை ஒன்று உடைந்தமையினால் அதிக வெள்ளப்பிரவாகம் உண்டாயது. அநேக வீடுகள் வெள்ளத்தினால் அள்ளுண்டன. ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலம் வெள்ளத்தில் மூழ்கியது. ஆடுமாடுகள் மாண்டன. மின்சார வெளிச்சத் தொழிற்சாலை அழிந்தமையால் அங்குள்ள நகரங்கள் இருள்மயமாகவிருக்கின்றன. பதினறுபேர் இறந்தனரென்றும், இன்னும் அநேகர் இறந்திருப்பார்களென்றும் சொல்லப்படுகின்றது. நேர்ந்த விபத்தைப்பற்றிய முழுவிபரமும் தெரியவில்லை.

பைத்தியகார மலாயன்.
கப்பற்றலைவரும் எண்மரும் கொலையுண்டனர்.

சென்ற திங்கட்கிழமை "கிளாங்" என்னும் புகைக்கப்பல் சிங்கப்பூர்த் துறைமுகத்தில் நின்றபோது மலாய பிரயாணி ஒருவன் பைத்தியகாரனாகிக் கத்தியுடன் ஓடிச்சென்று, அக்கப்பற் றலைவனாகிய மைக்டொனல்று என்பவரையும், வேறும் எண்மரையும் குத்தினன். எல்லோரும் இறந்தனர். கப்பலிலுள்ள பிரதான "என்ஜினியர்" படுகாயமுற்றனர். பொலிசர் அந்தப் பயித்தியம் பிடித்த மலாயனைச் சுட்டனர். அவன் உடனே வைத்தியசாலைக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே உயிர் துறந்தனன்.

மயிலிட்டிதெற்குச் சைவவாலிபர் சங்கம்.

ஷெ சங்கத்தாரின் கூட்டம் ஒன்று நிகழும் குரோதனவருஷம் ஐப்பசிமாதம் 16உ (1-11-25) ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் 6 மணியளவில் குரும்பகட்டி மகாதேவவித்தியாலயமண்டபத்தில் ஸ்ரீ பொ. பரமானந்த உபாத்தியாயரின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ்க்கூடிற்று. அத்தருணம் காரியதரிசி சென்றகூட்ட அறிக்கைப் பத்திரம் வாசித்தபின் அன்று பிரசாரகராய்ச் சமுகமளித்த வேதாரணியம் ஸ்ரீமத் கா. அருணாசலதேசிகர் அவர்கள் "சைவக்கிரியா உபதேசம்" என்னும் விஷயமாக ஓர் சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தினர். அதனைக்கேட்ட சபையோர்கள் யாவரும் பெருமகிழ்ச்சி யடைந்தனர். பின் 11 மணியளவில் தேவாரபாராயணத்தோடு கூட்டம் சமாப்தியாயிற்று.

கிரேக்க பல்கேரிய யுத்தசமாதானம்.

கிரேக்கருக்கும் பல்கேரியருக்கும் யுத்தம் தொடங்கிய விஷயத்தைப் பற்றிச் சென்ற பிரசாமொன்றில் வெளியிட்டுள்ளோம். சென்ற மகாயுத்தத்தில் ஈடுபட்டுச் சீவமோசமும் அதிக பணநஷ்டமும் அடைந்த தததுவாரச்சியங்கள் இவ்விரு தேசத்தாருக்குமிடையில் தொடங்கிய யுத்தத்தை நிறுத்துவதற்கு அதிக சிரமப்பட்டுழைத்தமையினால் யுத்தமின்றிச் சமாதானம் ஏற்பட்டது. சர்வதேச சங்கம் கிரேக்க பல்கேரிய அரசினரின் செயலைப் பெரிதுங் கண்டித்து, அற்ப மனஸ்தாபம் காரணமாக யுத்தஞ் செய்தல்கூடாதெனக் கூறியது. இருதேசத்தாரும் சர்வதேச சங்கத்தாருடைய கருத்தின்படி சமாதானத்துக்கு உடன்பட்டனர். மொறக்கோவில் பிரான்சியருக்கும் ஸ்பானியருக்குமிடையில் நிகழும் யுத்தத்தை நிறுத்துவதற்குச் சர்வதேசசங்கத்தாரேனும் மற்றெவரேனும் முயன்றிலர், சிந்தித்தாருமல்லர்.

எறிவெடி மருந்தால் மாண்டமை.

சென்றவாரம் ஹொறனையிலே கோமிஸ் சிங்கோ என்னும் ஒருவர் எறிவெடி மருந்தை அரைத்துக் கலந்தபோது நெருப்புப்பற்றி வெடித்தமையினால் தேகம் முழுவதும் கடுங் காயமுற்று இரத்தவெள்ளத்தில் மூழ்கிச் சிறிதுவேளையில் மாண்டனர்.

செய்ந்நன்றி மறவாத மிருகம்.
வாவியில் மூழ்கிய தலைவியைக் குதிரை மீட்டமை.

இங்கிலாந்திலே சவுத்ஹாம்ரன் என்னும் பிரிவுக்குச் சேர்ந்த பிளாக்வில்ரு என்னும் ஒரு கிராமத்தில் மஸ்சில் உவையிற் என்னும் ஓர் கன்னிகை தன்னுடைய குதிரை வண்டியில் மொப்ளி வாவிக்கரை வழியாகச் சென்றபோது தண்ணீர்குடிக்கும் பொருட்டுக் குதிரை நீரோரத்திற்கு வண்டியுடன் சென்றது. அதன் முன்னங்கால்கள் சறுக்கியமையினால் குதிரையும் வண்டியுடன் மஸ்சில்உவையிற் என்னுங் கன்னிகையும் அதிக ஆழமான வாவியுள் மூழ்கினர். அதிஷ்டாதநே வீசப்பட்ட அப்பெண் இரண்டு முறை நீரில் மூழ்கி மூன்றும்முறை தண்ணீரில் மிதந்தபோது குதிரை அதிக கஷ்டத்துடன் தன்னை வண்டியிற் பிணித்துள்ள தளைகளை ஒருவாறு அறுத்துவிட்டுத் தன் தலைவியின் பக்கலை யடைந்தது. கன்னிகை உடனே அதன் பிடர்மயிரைப் பற்றி அதில் இவர்ந்தனள். குதிரை அப்பெண்ணைக் கரையிற் கொண்டுபோய்ச் சேர்த்த பின் தன் தலைவியின் ஆயாசம் தீரும் பொருட்டுத் தலையினால் உரோஞ்சிக்கொண்டு துயருடன் நின்றதாம். செய்ந்நன்றி மறக்கும் மக்கள் மலிந்துவரும் இக்காலத்தில் மிருகங்கள் இதுபோன்ற செயல்களைப் புரிதல் அதிசயமாகும்.

கோண்டாவிற்சைவவித்தியாசாலைப் (53-ம் வருட) பரிசளிப்புக் கூட்டம்.

சென்ற மாதம் 31உ சனிக்கிழமை பிற்பகல் 5½ மணி தொடக்கமாக, வடமாகாணப் பிரதிநிதிகளிலொருவராகிய கௌரவ ஸ்ரீ துரைசுவாமி அவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் ஷெ கூட்டம் நடைபெற்றது. அவ்வேளையில் மேற்படி பாடசாலை மாணவரால் சம்பாஷணை கதாப்பிரசங்கம் விஷயப்பிரசங்கமாதியன செய்யப்பட்டன. இவற்றில் மாணவர் காட்டிய திறமைக்காகப் பரிசளிக்கப்பட்டது. அதன்பின்னர் அங்கு நிகழ்ந்த விஷயங்களைப் பற்றி ஆசிரியர் ஸ்ரீ சி. தா. சிதம்பரப்பிள்ளையவர்களாலும், அத்வக்காத ஸ்ரீ எஸ். ஆர் இராசரத்தினம அவர்களாலும், ஆசிரியர் ஸ்ரீ ஏ. துரையப்பாபிள்ளை அவர்களாலும், கௌரவ ஸ்ரீ சு. இராசரத்தினம் அவர்களாலும் குறிப்புரைகள் வியந்து கூறப்பட்டன. அப்பால் அக்கிராசனரும் அதிவிநயத்துடன் தமது அபிப்பிராயத்தை வெளியிட, தலைமையாசிரியர் ஸ்ரீ மு. பெரியதம்பி யவர்கள் சபையாரனைவரையும் வந்தனஞ்செய்துவேண்டிநிற்க, இரவு 9½ மணியளவில் கூட்டம் நிறைவேறியது.

கடித.

இலங்கையிற் கைத்தொழிற்கல்வி.

இற்றைக்கு மூன்றுவருடங்களுக்கு முன் அரசினர் முதன்முறையாகக் கைத்தொழிற் பாடசாலையை ஸ்தாபித்தனர். அதன்பின் பல இடங்களிலும் கைத்தொழிற் பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்டன. இப்பொழுது இலங்கையில் அறுபத்தேழு பாடசாலைகள் இருக்கின்றன. அவற்றுள் தச்சுவேலைகற்பிக்கும் பாடசாலைகள் 26; கூடைபின்னும் பாடசாலைகள் 27; மெழுகு வர்ணப்பாண்டங்கள் செய்யப் பயிற்றும் பாடசாலைகள் 3; பிரப்புவேலை பயிற்றும் பாடசாலைகள் 2 இவைகளைத் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் பாதிரிமாரால் பல வருடங்களாக நடத்தப்படுவன. வித்தியாபகுதியாருடைய அபிப்பிராயப்படி இப்பாடசாலைகள் விசேஷ நன்மையையும் அதிக சம்பாத்தியத்தையும் கொடுப்பனவாக விருக்கின்றன. இந்த வேலை இப்பொழுது பரிசோதனை முறையிலிருந்தாலும் இப்பாடசாலைகள் வருங்காலத்தில் அதிக கண்ணியமுறுமென்பதை இந்த ஆரம்பப்பெறுபேற்றிலிருந்து அறிதல் கூடும்.

தச்சுவேலை நெசவுவேலை என்னும் இவைகள் பயிற்றப்படும் பாடசாலைகளே இப்பொழுது அதிகமான வருவாயைக் கொடுக்கின்றன. அதிகதொகையான தளபாடங்கள் இங்கிருந்து விற்கப்படுகின்றன. மேல்மாகாணத்துள்ள வெர்தோட்டையிலும், மாத்தளையிலுள்ள பாலைப்பசவெலா என்னுமிடத்திலும் விசேட தச்சுவேலைப்பாடசாலைகள் இருக்கின்றன. தென்மாகாணத்துள்ள தோடண்டா, தல்பாவிலா என்னும் இரு இடங்களிலும் இரண்டு பெரிய நெசவு பாடசாலைகளிருக்கின்றன. வறக்கொடையிலே ஒரே ஒரு மட்பாண்டக்கல்வி பயிற்றும் பாடசாலையுண்டு. இதுவும் அதிக வருவாயைக் கொடுக்கின்றது. இப்பாடசாலைகள் தக்க கட்டிடமில்லாது கஷ்டமுறுவனவாகத் தெரிகின்றன. தமிழ்க் கைத்தொழிற் பாடசாலைகளுக்காகிய பிரேரணைகள் அதிவிரைவில் வித்தியாசங்கத்தாரால் ஆராயப்பட்டுத் தீர்மானம் செய்யப்படும். யாழ்ப்பாணத்தும் ஓர் கைத்தொழிற் பாடசாலையுண்டு அதனால் இப்பொழுது நன்மை உண்டாவதாகத் தெரியவில்லை.

எட்டாம் வட்டாரப்பிரதிநிதித்துவம்.

யாழ்ப்பாணப் பட்டினபரிபாலன சங்கத்தின் எட்டாம் வட்டாரப் பிரதிநிதியாக வருதற்கு நோக்கங்கொண்டிருந்த ஸ்ரீ மு. தாமோதரம்பிள்ளை (மாமாதம்பி) யவர்கள் தமக்கு நேர்ந்துள்ள சாவினங் காரணமாக இப்பொழுது அப்பிரயத்தனத்தைத் தாம் விட்டுவிட்டதாகத் தமது நண்பர்கட்கும் ஏனையோருக்குந் தெரிவிக்கும்படி எம்மைக் கேட்டுக்கொண்டனர்.

மகன் தந்தையைச் சருவினமை.
எதிரி தான்குற்றவாளியெனச்சாதிக்கின்றனன்.
நீதிபதி எதிரியை விடுதலைசெய்தனர்.

தெல்தெனியாவிலே ஜோர்ஜ் பெரிறு என்னும் பதினொந்து வயதுள்ள வாலிபன் ஒருவன் தனது பிதா தாயைச்சருவிக் காயப்படுத்திய பின் கைக்குழந்தையையும் இடறமுயன்றபோது சிறுவன் மண்வெட்டியினால் தந்தையின் தலையில் அடித்துக் காயப்படுத்திய சமாசாரத்தை இற்றைக்குச் சிலதினங்களுக்குமுன் வெளியிட்டுள்ளோம். இவ்வழக்குச் சென்ற திங்கட்கிழமை கண்டி டிஸ்திரிக்கோட்டிலே விசாரணைசெய்யப்பட்டது. எதிரியாகிய வாலிபன் தன்பக்கத்துக்கு நியாயதுரந்தரர் எவருமின்றி வெளிப்பட்டுத் தான் குற்றவாளியெனக் கூறினன். நீதிபதி இந்தவழக்குச்சம்பந்தமான விஷயங்களையெல்லாம் பொலிஸ் கோட்டு வழக்குப் புத்தகத்தில் தான் வாசித்திருப்பதாகவும், அப்படி இந்த எதிரி ஒரு குற்றமும் செய்யவில்லையென்றும் கூறி அவன் குற்றவாளியென்று கூறியமையை அங்கீகரிக்க மறுத்தனர் எனவே வழக்கு விசாரணை ஆரம்பமாயது. நீதிபதி எதிரியின் தந்தையாகிய பெட்றிக்பெறறுவை விசாரித்தனர் குறித்த தந்தை எதிரிதன் மூத்தமகனென்றும் குறித்த கலகம் நிகழ்ந்ததினத்திலே தான் தன் மனைவியைத் தாரவாளியால் அடித்தமை உண்மையென்றும் அதற்காக மகன் தன்னை மண்வெட்டியினால் அடித்தனனென்றும் கூறினன். பின்னர் எதிரியின் தாயும் பெட்றிக்பெறறுவின் மனைவியுமாகிய பேபி நோனா விசாரணைசெய்யப்பட்டனள். தப்பெண், "கலகம் நிகழ்ந்த அன்றிரவு என்புருஷன் மிகப்பிடிக்கும் தடி ஒன்றுவெட்டி வரும்பொருட்டு மகனுக்குக் கட்டளையிட்டனன்; அதிக இருளாயும் மழையாயுமிருந்தபடியால் அவன் அதற்கு இயைந்திலன் என்புருஷன் அதனாற்கோபங்கொண்டு எரிந்துகொண்டிருந்த ஒரு கொள்ளிக் கட்டையினால் சிறுவனை அடித்தனன். தந்தையையும் மகனையும் சமாதானம் செய்யும்பொருட்டு நான்சென்றபோது புருஷன் என்னை அடித்ததலும் என்னிலிருந்த கைக்குழந்தை நிலத்திலே தவறிவீழ்[illegible] என் புருஷன் என்னைக்கால்களாலும் கைகளாலும் பன்முறை உதைந்து அடித்[illegible]னர். இதனைக்கண்ட என்மகன் மண்வெட்டியினாலே தந்தையின் தலையில் அடித்தான். புருஷன் என்னையும் பிள்ளைகளையும் இடைவிடையே இவ்விதமாகக் கஷ்டப்படுத்துவதுண்டு. இக்கஷ்டங்களைப்பற்றி முன்னொருமுறைபொலிசருக்கும் அறிவித்திருக்கிறேன்" எனக்கூறினள். இவ்வளவில் விசாரணை நிறுத்தப்பட்டது. எதிரிபொலிஸ்கோட்டிற்கூறிய வாக்குமூலம் வாசிக்கப்பட்டது. நீதிபதி எதிரியை நோக்கி "நீ உன் தந்தையின் செயல் காரணமாக அவ்விதம் நடந்து கொண்டனை. நீ உன்னைப்பெற்ற தாயைக்காப்பாற்றும் பொருட்டு அப்படி நடந்து கொண்டமையினால் நீ செய்தது சரியென்றே நான் நினைக்கிறேன். நீ இன்னமும் பிராயமாகாத சிறு வனாயிருக்கின்றாய். உன்தந்தைசெய்த அக்கிரமத்தின் பொருட்டு இப்போது நீ நடந்துகொண்ட இத்தமுறையை ஒழிந்த வேறொருமார்க்கம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே நான் உன்னை நிரபராதியாகக் கண்டு விடுதலை செய்கின்றேன்" எனக்கூறி எதிரியை விடுதலைசெய்தனர்.

சற்போதமஞ்சரி.

(வண்ணை நகர்
ஸ்ரீ க. வைத்தியலிங்கபிள்ளை
எழுதியது.)

மலையான் விரமன் மதிலான் முதலிய
கோதிலா மூன்று அரணிலாக் கோட்டையும்
எல்லா வளங்களு மேய்தினு நீதி
திறம்பா வேந்த னில்லாத் தேசமும்
நாற்கதி யுள்ள தாயினு முக்கணைக்
கயிறுகோத் தடக்காக் காளை எருதும்
அரப்பில சுவையுள தாயினும் லவணம்
இட்டாக் காத வெளிறுள வுணவும்
தன்னிட்ட மாகத் திரிந்து சகத்தினில்
வீணரோ டிணங்கி நடக்க விடாமல்
"கண்களை யிமைகள் காப்பது போல"
நாளுங் கடிந்து நல்வழி நடாத்துந்
தந்தையில் லாத முரட்டுத் தனயனும்
எப்பெரு வெள்ள மேயினு முடைக்கா
அணைக் கட்டில்லா அகன்றநல் லேரியும்
நாணம் முதலிய நாற்குணங் களையும்
விடுத்து "மேலைத் தேயமேல் வியர்போல்"
வீட்டினு விராமல் வெளிப்புறம் போந்து
காளைய ரோடு கலந்துகை குலுக்கிக்
களித்தும் வதுவைசெய் யாதுகன் னியரும்
கொழுநனை யின்றி விளாவோடு கூத்துக
களியாட் டங்கட் கேதுகா ரிகையும்
வைகலு மடித்து மாசினை யகற்றிக்
கழுவிப் பெருக்காப் பெரியகல் லில்லமும்
படுகோலை யாதி பஞ்சபா தகங்களை
அஞ்சா தியற்று மிரக்கமி லாக்களை
மகிழ்நுக் கொண்ட வழப்புறு மாதும்
துணையிலாத் தூர்த்தர் வந்துகொண் டாடி
வம்புரை யியம்பி மகிழ்ந்திடு மனையும்
வெறிகமழ் முல்லை வெட்சி யாத்தை
மல்லிகை முதலிய மரங்கொடி செறிந்த
வலியகாப் பில்லா நந்தன வனமும்
உயிரைத் திரண மாகவே யுன்னி
எக்கா லத்தும் வெந்திடா தெதிர்த்து
ஒன்று சோடு நிர்மம நடத்தும்
பதாதி நாயக னில்லாப் படைகளும்
உத்தம சாதி சத்திய மொழுக்கம்
போதமார் கல்வி பொருந்தி யிருப்பினுந்
தனம்படைக் காது தரித்திர வாறுங்
ஆசான் சொல்லுங் கமைந்து நடந்து
கிரமமா யவரிடம் பாடங் கேட்டுக்
கல்லாது தச்சிலிக் கடைகளி லுலா
பிழைப்புத் தகங்களை யழைப்பித் தவைகளை
தப்புந் தவறுமாய்த் தானே யிருந்து
பண்டித ரிகழப் பயின்றிடு வித்தையுங்
கோழைத் தனமே குடிகொண் டிருக்கும்
நபுஞ்சகன் காத்தி னல்கிய வாளும்
கடற்கரை யதனிற் கருமே கம்போற்
பருத்து வளர்ந்த தாழையின் பழமும்
திடமுட னேர்தொழில் செய்யக் கூடிய
ஏதமில் வாலிப வயசோ டிருந்தும்
வேலையில் லாமல் வீணாட் கழித்து
அந்நிய விடத்தில் அருந்திய உணவும்
இங்ஙன மாக இயம்பிய வனைத்தும்
இருந்தும் மகிமை யெய்தமாட் டாவே.

மறுபிறப்புண்மை.

உலகத்தில் ஊடாடும் பல்லாயிரக்கணக்கான சீவபிராணிகளின் வித்தியாசமான நிலைமையால் இவ்வுண்மையை அறிந்துகொள்ளக் கூடும்.

எமக்கு இந்நிலையிலே மறதி பெரிது முள்ளது. இது எம்மைப் பற்றியுள்ள மலத்தின் காரியமாய் நிகழ்வது. நாம் பலப்பருவத்திற் செய்த வினைகளைத்தானும் யௌவன பருவத்திலே அறிந்துகொள்ளும் ஞாபகசக்தி எம்மிடத்தேயில்லை. இதுபற்றி நாம் பாலிய தசையிலே யாதொரு வினையுஞ் செய்திலேம் என்று ஒருவரும் சொல்லத்துணியார். ஆனால் நாம் முன்னர்ச் செய்துகொண்ட வினை, பின்னர் எமது ஞாபகத்தில் விளக்கமுறுது மறைந்திடினும் நாம் செய்துகொண்ட வினை காரணமாக நம்மை வந்தடுத்துள்ள அவ்வினைச் சார்பெனப்படும் கன்மமலம் எம்மிடத்தே அமைந்து விளங்கும். இவ்வினைச் சார்பாகிய கன்மமலம் அதன பலனை நாம் அனுபவிக்குமிடத்து எம்மைவிட்டு நீங்கிவிடும். ஆகவே கன்மபலனைக் கடவுள் எமக்கு ஊட்டுகின்றனர். அது ஊட்டப்படுமிடத்து நாம் செய்துகொண்ட கன்மமலத்தைப்பற்றிய அறிவு எம்மிடத்து விளங்கித் தோற்றுதாயினும் எம்மை வந்தடைந்துள்ளதாகிய கன்மமலம் நீங்குதலாகிய அறிவு எமக்கு உண்டாகும். இதுபற்றியே கன்ம பலன்களை யெல்லாம் கடவுள் அதததற்குரிய காலங்களிலே எமக்கு ஊட்டுவதென்க. கன்ம பலனை எமக்கு ஊட்டவே அத்தக் கன்மச்சார்பு எம்மைவிட்டு நீங்கிவிடும். அது நீங்கவே எமக்கு உண்மை யறிவு தலைப்பட்டு நன்னெறிக்குட்பட்டு உண்மை அனுபவத்துக்குரிய மார்க்கத்தை யறிவோம். இது பற்றியே சர்வ சீவகாருண்யர் கன்ம வினைப் பலன்களை எமக்கு ஊட்டுகின்றனர். நாம் ஒரு பிறவியிலே செய்த வினைகளை மற்றொரு பிறவியில் அறியவல்லவர்களல்லேம் என்பது பற்றியே கடவுள் புண்ணிய பாவங்களையும் அப்புண்ணிய பாவங்களாலெய்தற்பாலனவாகிய பலன்களையும் எமக்கு வேதசிவாகமங்கள் வாயிலாக அறிவித்திருக்கின்றார் என்பதும் புலப்படுகின்றன. ஆகவே, நாமெல்லோரும் உண்மையான காட்சியை அறிந்து முத்திப் பிரசாதத்தை அடைவதற்குப் பல பிறவிகள் வேண்டப்படுவோமாக.

இங்ஙனம்,
சே. சிவநாதன்.

பன்னிரண்டுவித புத்திரரின் வரலாறும் புத்திரப்பிராப்தியோகமும்.

ஒருவனுக்கு சுவபுத்திரனொருவனும் போலிப் புத்திரர் பதினொருவருமாகிய பன்னிருவரும் புத்திரரெனப்படுவார் அவையவருமாறு:—

முறைப்படி விவாகஞ் செய்யப்பட்ட தனது மனைவியிடத்திற் றன்னாலே பிறப்பிக்கப்பட்ட புத்திரனே சுவபுத்திரனெனப்படுகிற ஔரசன். இறந்தவனுக்கும் நலிக்கும் நோயாளனுக்குமுரிய மனைவியிடத்தில் விதிப்படி பிறனாற் பிறப்பிக்கப்பட்ட புத்திரன் க்ஷேத்திரசன். மாதாவாலேனும் பிதாவாலேனுஞ் சலதாரையோடு கொடுக்கப்பட்டவனாகித் தன் வருணத்துக்கொத்தவனுங் குணகுற்றங்களையறிந்தவனுந் தகுந்தவனுமாகித் தன்னாற் புத்திரனாகச் செய்து கொள்ளப்பட்டவன் கிருத்திரிமன். தன் மனைவியிடத்திலறியப்படாத பிதாவினாற் பிறப்பிக்கப்பட்டவன் கூடோற்பன்னன். மாதாவினாலேனும் பிதாவினாலேனுந் தள்ளிவிடப்பட்டவனாகித் தன்னாலேற்றுக்கொள்ளப்பட்டவன் அபவித்தன். தன் மனைவி விவாகஞ் செய்யப்படு முன்னர்ப் பிதா வீட்டிற் கன்னியாயிருக்குமிடத்து மறைவாகப் பெற்ற புத்திரன் கானீனன். முன்னர்க் கருப்பந்தரித்தவளேயாகி அறியப்பட்டு மறியப்படாதும் விவாகஞ்செய்யப்பட்ட தன் மனைவி பெற்றபுத்திரன் சகோடன். மாதா பிதாக்களிடத்திற் பிள்ளையாதற்பொருட்டு விலை கொடுத்துக் கொள்ளப்பட்டவனாகிய தன் வருணத்துக்கொத்தவனேனு மொவ்வாதவனேனுமாகிய புத்திரன் கிரீதன். கணவனாற்றள்ளிவிடப்பட்டவளாயேனுங் கணவனிறந்து விதவையாயேனுமிருந்து தானாக மீண்டு [illegible]லவாயப்பட்ட பெண்ணிடத்திற் பிறந்தவன் பௌனர்ப்பவன். மாதா பிதாக்களை யிழந்தவனேனு மவராற் காரணமின்றி விடப்பட்டவனேனு மாகித்தானாகவே தன்னை ஒருவனுக்குக் கொடுத்த புத்திரன் சுயமதத்தன். சூத்திரப் பெண்ணிடத்

திக்லைசயாற் பிராமணனாற் பிறப்பிக்கப்பட்டவன் சௌத்திரன். இதுவே பன்னிரண்டு புத்திரரின் வரலாறு.

ஒருவனுக்குப் புத்திர பிராப்தியோகமுண்டெனுல் மேலே காட்டிய (12) புத்திரர்களுள் ஏதேனுமோர் புத்திரப் பிராப்தி யுண்டாகுமென்பதைக் கவனித்துப் புத்திரஸ்தானமாகிய ஐந்தாமிடத்திலிருக்கும் கிரகங்களைக் கொண்டும் பிறவற்றாலும் அறியவேண்டும். அஃதாவது:—ஒரு சாதகனுடைய ஐந்தாமிடமாகிய புத்திரஸ்தானமானது சுபக்கிரகங்களுடன் சேர்ந்தாவது, அல்லது சுபக்கிரகங்களின் பார்வையைப் பெற்ருவது, அல்லது சுபக்கிரகங்களின் இராசியாயாவது இருக்கின்றதோ அந்தச் சாதகனுக்குப் புத்திரனுண்டாவது நிச்சயம். மேற் கூறியதற்கு மாறியிருந்தால் புத்திரர்கள் இல்லை. பெலம்பெற்ற சென்மலக்கினத்திலிருந்தாவது சந்திரலக்கினத்திலிருந்தாவது ஐந்தாம் வீடாகிய புத்திரஸ்தானத்தில் வியாழனுடைய ஷட்வர்க்கங்களுள் ஒன்றிருக்குமானுல் அதாவது புத்திரகாரனுகிய வியாழனுடைய வீடு, வியாழனது திரேக்காணம் (இராசியின் மூன்றிலொரு கூறு] வியாழனது நவாம்சம் திரிம்சாம்சம் துவாதசாம்சம் இவற்றுள் ஏதேனுமொன்றிருக்குமானுல் மேற்சொல்லிய பன்னிரு புதல்வர்களுள் ஒன்ருய முறையே விவாகஞ் செய்யப்பட்ட தனது மனைவியிடத்திற்றன்னுலே பிறப்பிக்கப்பட்ட சுவபுத்திரனெனப்படுகிற ஔரசபுத்திரனுண்டாவன். புத்திரராசியிலுள்ள சுபக்கிரக நவாம்சத்தில எண் எவ்வளவு சென்றிருக்கின்றதோ அவ்வளவு எண்ணுள்ள புத்திரர்கள் பிறப்பார்கள். இது அனுபவத்திற் கண்டது. க்ஷேத்திரசன் முதலியோரது பிராப்தியைக் குறித்து மறுமுறை வரும்.

இங்ஙனம்,
ச. பொன்னுஸ்வாமிக்குருக்கள்
அம்மன்கோயில்,
சுதுமலை.

☞ "சேலம் பனியன்கள்."

உறுதியானது விலைசரசம்.
காட்பட உழைக்கக்கூடியது,
வியாபாரிகளுக்குத் தக்க கமிஷன் கொடுக்கப்படும்.
தேவைக்கு அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.
ரூயல் நிட்டிங் பேக்டரி,
செவ்வாய்பேட்டை, சேலம்.
(H 40) S. இந்தியா.

புதிய தினுசுகள் சகாய விலைகள்
நூதனமான பட்டு ஜவுளிகள்.

எங்களிடம் தற்காலம் நாகரிகத்திற்கேற்ற பனரிஸ், பெங்களூர், சேலம், கோயம்புத்தூர், கொர்னுடு, காஞ்சீபுரம், கும்பகோணம், தஞ்சாவூர், பாடிப்பேட்டை, பட்டணம், பாரிஸ் பட்டு முதலிய தினுசுகளில் சுத்தமானபட்டுச்சேலைகளும் ஜரிகைநூல் சேலைகளும், பட்டுச்சரிகைச் சால்வைகளும் தினுசுகளும் தயாராயிருக்கிறது.

ஒருதடவை வாங்கிப் பார்த்தால் அதின் நயம் தெரியும். வெளியூர் ஆடர்கள் வி. பி. மூலமாக அனுப்பப்படும்.

பி. ஆர். அனந்தநாராயணய்யர்,
ஜவுளி வியாபாரம்,
205, செட்டித்தெரு,
கொழும்பு.

P. R. Ananthanarayana Iyer,
Silk & Cloth Merchant,
205, Sea Street,
Y. 39) COLOMBO.

ஒரு சாதாரண பொருளே.

நோவுக்கானதைலத்தில் சுகந்தம்தேடமாட்டீர். அநேகமாய்ச் சுகந்தம் உண்டாக்குவதில் நோவை நீக்குங்குணம் மறைந்துவிடுகிறது.

லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம்

செய்வதில் சுகந்தமே வேண்டுமென்று எதுவுஞ் சேர்க்கவில்லை நோவைக் குணமாக்குஞ் சரக்குகளில் அவைகளின் குணத்தை விலக்கவில்லை. 12 திறமான சரக்குகள் சேர்ந்து அதி உயர்ந்த குணங்கள் வாய்ந்த தைலமே லிட்டில்ஸ் ஓறியண்டல் பாம். அதனுல் அது உடனே கீல்வாயு, தலைக்குடைச்சல், இடுப்பு வலி, பாரிச வாய்வு, வாதரோகம், மண்டையிடிப்பு முதலிய நோவுகளைத் திடமாய்க் குணப்படுத்துகிறது.

4—L—25.



(Y. 41 B)

காரைநகர்ச் சுந்தரேஸ்வரர் ஆலயத்திருப்பணி.

:————:0:————

காரைநகர்ச் சுந்தரேசுவரர் கோவில் திருப்பணிக்காக தற்காலம் மலேயாவில் வசிக்கும் காரைநகர் வாசிகளும், பிரநமாகிய சைவச் செல்வப் புண்ணியசீலர்களால் கைபெழுத்து வைக்கப்பட்ட விபரமும் தொகையும்

ச. மாசிலாமணி.

குலலா கிரில் பெடா,
25—10—25.

நம்.	தற்காலம் இருக்கும் இடம்.	பெயர்	தொகை. ரூபா சதம்.	ரூபா சதம்.	குறிப்பு.
1	கோலாலம்பூர்	வே. ஆறுமுகம்	150 00		
2	,,	இ. அம்பலவாணர்	100 00		
3	,,	சி. கணபதிப்பிள்ளை	50 00		
4	,,	தா. ஆறுமுகம்	40 00		
5	,,	கு. சங்கரப்பிள்ளை	50 00		Paid
6	,,	ச. வைத்திலிங்கம்	100 00		
7	,,	வே. ஆறுமுகம்	50 00		
8	,,	ச. தம்பிப்பிள்ளை	40 00		
9	,,	இ. அம்பலவாணர்	40 00		
10	,,	பொ. சுப்பிரமணியம்	40 00		
11	,,	வி. சுப்பிரமணியம்	30 00		
12	,,	அ. பொன்னம்பலம்	35 00		
13	,,	அ. வேலுப்பிள்ளை	35 00		
14	,,	அ. சிவசம்பு	50 00		
15	,,	வே. நாகலிங்கம்	30 00		
16	,,	சி. தம்பிப்பிள்ளை	50 00		
17	,,	மு. கணபதிப்பிள்ளை	50 00		
18	,,	கா. விசுவலிங்கம்	30 00		
19	,,	இ. வே. கந்தையா	35 00		
20	,,	ப. வேலுப்பிள்ளை	25 00		
21	,,	க. தம்பையா	50 00		
22	,,	ஐ. அருணசலம்	30 00		
23	,,	மு. தம்பிப்பிள்ளை	25 00		
24	,,	ச. செல்லையா	40 00		
25	,,	ஆ. அம்பலவாணர்	30 00		
26	,,	பொ. கந்தையா	25 00		
27	,,	க. சின்னத்தம்பி	100 00		
28	,,	ச. வேலுப்பிள்ளை	25 00		
29	,,	சி. கந்தையா		25 00	
30	,,	ச. மதியாபரணம்		25 00	
31	,,	த. சுந்தரம்பிள்ளை	25 00		
32	,,	பொ. செல்லையா	25 00		
33	,,	அ. பொன்னையா	25 00		
34	,,	க. வே. கந்தையா	25 00		
35	,,	ச. இளையதம்பி	25 00		
36	,,	ச. முருகேசு	75 00		
37	நவப்	சி. சோமசுந்தரம்		25 00	
38	,,	தி. கார்த்திகேசு		10 00	
39	,,	மு. கந்தையா		10 00	
40	,,	நா. கணபதிப்பிள்ளை		3 00	
41	,,	வே. கார்த்திகேசு		2 00	
42	,,	த. பொன்னம்பலம்	5 00		
43	,,	வே. பொன்னம்பலம்	100 00		
44	,,	மு. நடராசா	10 00		
45	சுங்கைசோ	கா. கந்தையா	250 00		
46	கோலைச்சொப்பு	ஆ. வேலுப்பிள்ளை	40 00		
47	,, Gap,	அ. செல்லையா	100 00		
48	கோலைப்பிசு	இ. முருகேசு	50 00		
49	,,	க. நல்லதம்பி	50 00		
50	,,	வி. அ. நாகலிங்கம்	25 00		
51	,,	ச. வேலுப்பிள்ளை	50 00		
52	,,	ஆ. பரமநாதி	25 00		
53	,,	ஆ. கநகசபை	25 00		
54	,,	ந. சுப்பிரமணியம்	25 00		
55	,,	ச. நமசிவாயம்	10 00		
56	,,	ஆ. சபாபதி	10 00		
57	,,	பொ. பூபாலபிள்ளை	10 00		
58	,,	க. கணபதிப்பிள்ளை	15 00		
59	வித்தம்.	க. கநகசபை	100 00		
60	,,	ச. பரமநாதர்	50 00		
61	,,	பொ. அருளம்பலம்	15 00		
62	,,	க. செல்லையாபிள்ளை	25 00		
63	மெந்தக்காய்ப்	ஆ. முத்தையா	25 00		
64	தெம்கோ	வே. விசுவலிங்கம்	25 00		
65	,,	ஆ. முருகேசு	10 00		
66	,,	மு. பொன்னம்பலம்	10 00		
67	,,	அ. கதிரவேலு	10 60	7 00	Paid
68	கோல்ப்பிலா	ச. ப. வீரகத்தி	50 00		
69	,,	அ. நாகலிங்கம்	50 00		
70	,,	இ. க. மார்க்கண்டு		5 00	Paid
71	,,	தி. கோவிந்தசாமி	30 00		
72	ஜெலுபு	ச. ஆசைப்பிள்ளை	50 00		
73	,,	வே. செல்லையா	10 00		
74	சிறம்பான்	சி. வைத்திலிங்கம்		10 00	
75	,,	கா. நல்லதம்பி	50 00		
76	,,	க. கநகசபை	30 00		
77	செண்டோங்	சி. சுப்பிரமணியம்	50 00		
78	,,	ஆ. கந்தையா	25 00		
79	நம்பௌ	க. தம்பையா		10 00	
80	தம்பிங்	அ. வேலுப்பிள்ளை	10 00		
81	,,	க. முத்துக்குமாரு	10 00		
82	மலாக்கா	சு. முத்தையா	25 00		
83	,,	சி. கந்தையா	25 00		
84	சுங்கை	வே. சுப்பிரமணியம்		10 00	
85	,,	அ. ஆறுமுகம்		15 00	
86	,,	வே. சுப்பிரமணியம்	50 00		
87	பீடோர்	க. ஆறுமுகம்	15 00		Paid
88	,,	க. நாகலிங்கம்		10 00	Paid
89	தெலுக்கஞ்சன்	க. வைத்தியலிங்கம்		5 00	Paid
90	தாப்பாரோட்டு	ச. நல்லதம்பி	50 00		Paid
91	கோத்தபாறு	அ. இராசையா	50 00		
92	வத்துக்காசா	ச. சாமுவேல்	25 00		
93	,,	சி. தம்பு	25 00		
94	,,	கா. அம்பலவாணர்	50 00		
95	,,	சோ. சின்னத்தம்பி	20 00		
96	,,	க. ஆ. முருகேசு	10 00		
97	,,	பெ. கார்த்திகேசு	25 00		
98	,,	ஒரு சிநேகிதன்		25 00	
99	,,	அ. நாகலிங்கம்	25 00		
100	ஈப்போ	ச. சரவணமுத்து	100 00		
101	,,	ச. ஆறுமுகம்	50 00		
102	,,	க. வேலுப்பிள்ளை	25 00		
103	,,	ச. கந்தையா	25 00		
104	,,	சி. சுப்பிரமணியம்	25 00		
105	,,	ச. வேலுப்பிள்ளை	15 00		
106	,,	ச. சுப்பிரமணியம்	25 00		
107	,,	ச. ஆறுமுகம்	25 00		
108	,,	வி. பரமு	15 00		
109	கோலக்கங்சார்	கையிலாசர் ஆறுமுகம் சுளிபுர.		25 00	
110	,,	செம்பர்மகன் வேலுப்பிள்ளை	100 00		
111	,,	சோ. முருகேசு	15 00		
112	,,	கந்தர் கணபதிப்பிள்ளை	5 00		
113	தைப்பிங்	சோ. வைத்தியலிங்கம்	50 00		
114	,,	தி. முருகேசு	50 00		
115	,,	வீ. தம்பிப்பிள்ளை	50 00		
116	,,	எம். எஸ். தில்லையம்பலம்	20 00		
117	,,	சி. வே. கந்தையா	15 00		
118	,,	வே. கணபதிப்பிள்ளை	15 00		
119	,,	க. சின்னத்தம்பி	15 00		
120	,,	ச. ஆறுமுகம்	15 00		
121	லாக்கண்சிருய்	ச. நல்லதம்பி	10 00		
122	,,	அ. கந்தையா	15 00		Paid
123	பாரப்பக்தார்	ச. சுப்பிரமணியம்	100 00		
224	,,	ஆ. கணபதிப்பிள்ளை	15 00		
125	,,	சி. வேலுப்பிள்ளை	25 00		
126	புக்கிட்மேட்டாசம்	ச. தில்லையம்பலம்	15 20		
127	பிறை	ச. ஆறுமுகம்	25 00		Paid
128	,,	மு. அப்பச்சி	55 00		
129	,,	சுந்தரம்பிள்ளை வேலுப்பிள்ளை	10 00		
130	,,	ச. கந்தையா	25 00		
131	,,	வி. சங்கரப்பிள்ளை	20 00		
132	பினுங்கு	டாக்குத்தர் க. முத்துக்குமாரு (சமாதான நீதிபதி)	100 00		
133	கிட்டா செறடிங்	கணபதிப்பிள்ளை ஐயாத்துரை	50 00		
134	கொடியாங்	ஆ. சிவசம்பு	50 00		
135	அஞ்சான்	சி. தம்பிப்பிள்ளை	25 00		
136	ஜுரூன்	அ. முருகேசு	30 00		
137	பொலிஸ் ஆசேரு	க. கதிரவேலு	50 00		Paid
138	சாங்காரி	கா. கைலாசபிள்ளை	50 00		
139	கிட்டா	ஏகாம்பரப்பணம்	300 00		

(Mis. 741.)

குருயோசம.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by Pandit V. T. Sambandhan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.